# முக்கடலில் இருந்து முத்தமிழ்த் தேர்!

**கடலில் இருந்து கப்பல் வரும். ஆனால் கடலில் இருந்து முத்தமிழ்த் தேர் புறப்பட்டு இருக்கிறது!**

**காரணம், புறப்பட்ட இடம் முப்பால் தந்த வள்ளுவன் நிற்கும் முக்கடல் சூழ்ந்த இடம் என்பதால் முத்தமிழ்த் தேர் புறப்பட்டு வருகிறது. முத்தமிழ்த் தேர் என்றாலே அது முத்தமிழறிஞரின் தேர் என்பதைச் சொல்லத் தேவையில்லை.**



அந்தளவுக்கு மொத்தத் தமிழையும் தன்னுள் அடக்கி ஆண்டவர் கலைஞர். அவரது நூற்றாண்டு விழாவை, ஒரு விழாவாக எடுத்தல் முடியாது, தகாது என்பதால் 12 வகைப்பட்ட விழாவாக நடத்தத் திட்டமிட்டார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு விதமாய் கலைஞரைக் கண்டு வருகிறது. பல்லாண்டுகளாக தலைவர் கலைஞரின் உதவியாளராக இருந்த அண்ணன் செயல்மணி ஒருமுறை சொன்னார்: 'ஐம்பது வருஷமா தலைவரை பக்கத்துல இருந்து பார்க்கிறேன். இன்னும் முழுசா பார்த்து முடிக்கலை" என்றார். அப்படி கோடி ஜோதிப் பார்வைக்கும் புலப்படாத அறிவாளுமை கொண்டவர் கலைஞர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்த ஒரு குழு **'எழுத்தாளர் கலைஞர்'** என்பது ஆகும். மாண்புமிகு அமைச்சர் பெரிய கருப்பன் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கயல்விழி செல்வராஜ் ஆகியோரை துணைத் தலைவர்களாகவும் கொண்ட இக்குழுவில் ஆர். பூரணலிங்கம், ஆர்.பாலகிருஷ்ணன், ஏ. எஸ்.பன்னீர்செல்வம், கலாப்ரியா, எஸ்.ராமகிருஷ்ணன், இமையம், அறிவுமதி, வி.எம். எஸ்.சுபகுணராஜன், சல்மா, தமிழ்மகன், பொதிய வெற்பன் ஆகியோருடன் நானும் உறுப்பினராக இடம்பெற்றிருந்தேன்.

**ப.திருமாவேலன்**

கலைஞரின் படைப்புகளைத் தாங்கிய ஒரு வாகனத்தை தயாரித்து அதனை தமிழ்நாடு முழுவதும் வலம் வரச் செய்வது எங்கள் குழுவினரின் சிந்தனை. அதனை செயல்வடிவம் கொடுத்துக் காட்டினார் கலை இயக்குநர் சரவணன் . அனைத்துப் பணிகளையும் தனது தோளில் சுமந்தார் மக்கள் தொடர்பு அதிகாரியான இராஜா. கடந்த 4 ஆம் நாள் அன்று குமரி முனையில் இருந்து மாண்புமிகு அமைச்சர்கள் பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனோ தங்கராஜ், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 'முரசு' அறைந்து வாகனத்தை இயக்கி வைத்தார்கள். கொடி அசைத்தல், ரிப்பன் வெட்டுதல் என்பதெல்லாம் கலைஞரின் முரசு தமிழுக்கு ஒவ்வாது என்பதால் முரசு முழங்கியது.

**வாகனத்தின் வடிவமே 'பேனா'தான். கலைஞரின் பேனா, திறந்த வடிவில் இருக்கிறது. கலைஞரின் கண்கள் திறந்திருக்கும் நேரமெல்லாம் பேனாவும் திறந்தே இருக்கும். முள் முனை தலை கவிழும் போது, தமிழினம் தலை நிமிரும். 'உடைந்த வாளாக இருந்தாலும் ஒரு வாள் தாருங்கள்' என்று அந்த முனைதான் எழுதியது. 'வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்று அந்த முனைதான் எழுதியது.**



உள்ளே நுழைந்தால் கோபாலபுரம் வீட்டில் கலைஞரின் ஆளுமை அரசவை. அதில் அவர் நடுநாயகமாக அமர்ந்திருக்கிறார். அவரது புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவையே நூலகம் போல இருக்கிறது. எழுத்தாளர் இமையம் தயாரித்த **'எழுத்தாளர் கலைஞர்'** குறும்படம் ஒலிக்கொண்டே இருக்கிறது. 13 வயதில் கலைஞரின் கையெழுத்து முதல் 90 ஆம் ஆண்டை கடந்த கையெழுத்து வரை சுவராக இருக்கிறது. இதைப் பார்க்கும்போது ஆயிரமாண்டு சித்திரச் சுவர் போல இருக்கிறது. வாகனத்தைச் சுற்றிலும் கலைஞரின் புத்தகத் தலைப்புகள் எழுதப்பட்டுள்ளன. 'ஒரு லாரிக்கு எழுதிக் குவித்திருக்கிறார்' என்று சொல்லத்தக்க அளவுக்கு அத்தனை தலைப்புகள்.

**இதோ படைப்பாளி கலைஞரின் வாகனம் தமிழ்நாடு முழுவதும் வலம் வரப் போகிறது. கலைஞர் எந்த ஊர்க்காரரும் இல்லை. எல்லா ஊர்க்காரரும் அவர். எல்லா ஊர்களிலும் அவரது அரசியல் பயணம் இருந்துள்ளது. எல்லா ஊர்களிலும் அவர் தனது ஆட்சி காலத்து முத்திரைத் திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். அவர் உருவாக்கிய நவீன தமிழ்நாட்டை 'முத்தமிழ்த்தேர்' ஊர்ந்து வருகிறது. டிசம்பர் 4 தலைநகர் சென்னையை அடைய இருக்கிறது.**

**உள்ளே நுழைந்து வெளியில் வரும் போது ... 'உடன்பிறப்பே' என்ற ஒற்றைச் சொல்லை உங்கள் இதயம் கேட்கலாம். 'தென்றலைத் தீண்டியதில்லை, தீயைத் தாண்டி இருக்கிறேன்' என்பதை உங்கள் உதடுகள் உச்சரிக்கலாம். குறளோவியத் தொல்காப்பியப் பூங்காவில் தென்பாண்டிச் சிங்கத்தின் உறுமலைக் கேட்கலாம். அந்தக் கரகரக் குரல் உங்களை காந்தமாக மீண்டும் அந்தத் தேருக்குள் இழுக்கலாம்.**



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் முன்னிலையில் 234/77 ஆய்வுப் பயணத் திட்டத்தின் கீழ் திருவரங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் விளையாட்டுத் திடலை 3.11.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார்.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2022–2023'ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித்துறை சார்பாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு கல்வி இணைச் செயல்பாடுகளுக்கான போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றிபெற்ற 100 மாணவர்கள் 03/11/2023 அன்று ஜப்பான் நாட்டிற்கு பயணமானார்கள். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் மாணவச் செல்வங்களோடு ஜப்பான் நாட்டிற்கு பயணமானார். அங்கு மாணவச் செல்வங்களை அழைத்துக்கொண்டு தலைநகர் டோக்கியோவில் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களோடு உலக புகழ் பெற்று விளங்கும் மிராய்கான் அருங்காட்சியகம் மற்றும் இந்திய தேசிய பள்ளிக்குச் சென்றார். மிராய்கான் அறிவியல் அருங்காட்சியகம் தொடர்ந்து பல அறிவியல் சாதனைகளைப் படைத்து வருகின்றது. இந்திய தேசிய பள்ளிக்குச் சென்ற அமைச்சர் அவர்களை அப்பள்ளி நிர்வாகத்தினரும், மாணவர்களும் அன்போடு வரவேற்றுள்ளார்கள். அங்கிருந்த நூலகம், வகுப்பறை மற்றும் கற்பித்தல் முறைகளைப் பற்றி அமைச்சரும், மாணவர்களும் பார்வையிட்டார்கள்.


